**Higher School Certificate (HSC) minimum standard parent meeting request**

# ‘மேல்நிலைப் பாடசாலைச் சான்றிதழ்’ (HSC)-ஐப் பெறுவதற்கானக் குறைந்தபட்சத் தர-நிலை குறித்த பெற்றோர் சந்திப்பிற்கான வேண்டுகோள்

Name of student
மாணவரதுபெயர்

Name of parent
பெற்றோரது பெயர்

Date for meeting
சந்திப்புத் திகதி

அன்புடைய பெற்றோர் / பராமரிப்பாளருக்கு:

HSC குறைந்தபட்சத் தர-நிலை குறித்து நினைவூட்டுவதற்காக இக் கடிதத்தினை உங்களுக்கு எழுதுகிறேன். HSC சான்றிதழைப் பெறுவதற்கு மாணவர்கள் எண்ணறிவு மற்றும் எழுத்தறிவு ஆகியவற்றில் குறைந்தபட்சத் தர நிலை ஒன்றைச் சாதிக்க வேண்டியது கட்டாயமாகும். வாசிப்பு, எழுத்துத் திறன் மற்றும் எண்ணறிவு ஆகியவற்றிற்கான இணையவழிச் சோதனைகள் மூலம் இந்தக் குறைந்தபட்சத் தர-நிலை நிர்ணயிக்கப்படுகிறது.

இப்போதைய நிலையில் உங்களுடைய பிள்ளை, HSC -யிற்கானக் குறைந்தபட்சத் தர-நிலையை இன்னும் அடையவில்லை, ஆதலால் HSC சான்றிதழைப் பெற இயலாத அபாய நிலையில் அவர் இருக்கிறார்.

பின் வருவனவற்றில் உங்களுடைய பிள்ளை தர-நிலைகளைப் பூர்த்தி செய்யவில்லை:

- ☐ Reading
  வாசிப்புத் திறன்
- ☐ Numeracy
  எண்ணறிவு
- ☐ Writing
  எழுத்துத் திறன்

HSC -யிற்கானக் குறைந்தபட்சத் தர-நிலையை அடைவதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் உங்கள் பிள்ளைக்கும், அதை அவர்கள் சாதிக்க ஆதரவுதவியாக இருப்பதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் உங்களுக்கும் அளிக்க நான் விரும்புகிறேன்.

நீங்களும், உங்கள் பிள்ளையும், பாடசாலையும் உங்களுடைய பிள்ளையின் படிப்பிற்கான திட்டத்தினைப் பற்றி ஒத்துழைப்பாய்க் கலந்துரையாடுவதற்கு ஏது செய்யும் வகையில் மேலே சொல்லப்பட்டுள்ள திகதியில் கலந்துரையாடல் சந்திப்பு ஒன்றிற்கு நான் உங்களை அழைக்கிறேன். HSC -யைப் பற்றிய உங்கள் பிள்ளையின்எண்ணங்கள், கிடைக்கும் எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு மேம்பாட்டிற்கான ஆதரவுதவிகள் மற்றும் பாடசாலைக் கல்விக்குப் பிறகு உள்ள தெரிவுகள் ஆகியவற்றை இக்கலந்துரையாடல் உள்ளடக்கும். உங்கள் ஈடுபாடு மிகவும் முக்கியமானது.

‘NSW கல்வித் தர-நிலைகள் ஆணைய’ (NSW Education Standards Authority (NESA)) த்தின் வலைத்தளத்தில் உள்ள உங்கள் பிள்ளையின் Student Online கணக்கில் HSC குறைந்தபட்சத் தர-நிலைகள் சோதனை முடிவுகளைக் காணலாம். சந்திப்பின் போது இதன் பிரதி ஒன்று எம்மிடம் இருக்கும்.

இந்தச் சந்திப்பிற்காக மொழிபெர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவு செய்து பாடசாலையுடன் தொடர்புகொள்ளுங்கள், மற்றும் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் கிடைக்கும் பட்சத்தில் ஒருவரை அவர்கள் ஒழுங்கு செய்வர்.

## தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை

பாடசாலையுடன் தொடர்புகொள்வதில் உங்களுக்கு மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரது உதவி தேவைப்பட்டால், 13 14 50 -இல் ‘தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை’யுடன் தொடர்புகொண்டு உங்கள் மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். தொலைபேசி இயக்குனர் பாடசாலையுடன் தொடர்புகொண்டு உரையாடலில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை இணைப்பிற்குக் கொண்டுவருவார். இச் சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.

உங்கள் உண்மையுள்ள

பாடசாலை அதிபர் (Principal)

HSC குறைந்தபட்சத் தர-நிலைக் கொள்கைகளைப் பற்றிய மேலதிகத் தகவல்களை NESA வலைத்தலத்தில் கானலாம்.
https://educationstandards.nsw.edu.au/wps/portal/nesa/11-12/hsc/hsc-minimum-standard